ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2117/2 - 2019 අප්‍රේල් මස 01 වැනි සඳුදා - 2019.04.01
*2117/2 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### *காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)*

*39 அ (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2013ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 26 ஆந் திகதிய 1807/22ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) பிரசுரிக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 112ஆம் இலக்க காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வின் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்ட காணித்துண்டுகள் முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளதோடு அரசின் சார்பில் அச்சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக் காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எனினும் அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான், குறித்த காணித் துண்டுகளில் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டை இக் கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.*

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.

எனது இல : 4-3/10/2012/LRB/97.
காணி. எ. உத். இல. : WGSWD&EIP/ACQ/KB/12.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
“மிஹிகத்த மெதுர”, காணிச் செயலகம், இல. 1200/6,
ரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை,
2019.03.27.

### அட்டவணை

மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், கெஸ்பேவ பிரதேச செயலாளர் பிரிவில், இல. 535 A, பெல்லன்வில கிராம அலுவலர் பிரிவில், பொரலெஸ்கமுவ கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் 2016.02.11 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட கொ 9466 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித் துண்டின் எல்லைகள் :

**1. துண்டு இல. 09 - கண்டுபிடிக்க முடியாது - விஸ்தீரணம் : 0.0825 ஹெக்டயார்**

வடக்கு : இவ் வரைபடத்தில் துண்டு இல. 42 மற்றும் இலக்கம் கண்டுபிடிக்க முடியாத காணி ; கிழக்கு : இலக்கம் கண்டுபிடிக்க முடியாத காணி, மாலனி புலத்சிங்கள மாவத்தையில் உரிமைக் கோருபவர் கண்டுபிடிக்கப்பட முடியாத மற்றும் இல. 22/3, மாலனி புலத்சிங்கள மாவத்தை மாஸ் மேதாவினி அயேஷா கனகா உரிமை கோரும் காணி ; தெற்கு : இவ்வரைபடத்தின் துண்டு இல. 10 மற்றும் 26/2 மாலனி புலத்சிங்கள மாவத்தை ; மேற்கு: இவ் வரைபடத்தின் துண்டு இல. 42.

04-484

1A – G29782-26 (2019/04) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.
இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.